தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித் திட்டம்)
செயல் முறைகள், சென்னை - 6
ந.க.எண். 69206 /எம்/இ2/2023, நாள் 28.11.2023

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு பள்ளிகளில் மிஷன் இயற்கை – சுற்று சூழல் திட்டம் 2023–2024 செயல்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை:
1. பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை - 6, ந.க.எண்.56667/எம்/இ2/2022, நாள் : 15.11.2022.
2. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6, ந.க.எண்.56667/ எம்/ இ2/2022, நாள்: 22.05.2023.
3. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல் முறைகள், சென்னை - 6, ந.க.எண்.56667/எம்/ இ2/2022, நாள் : 08.11.2023.

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி கடந்த ஆண்டு 2022–2023 மிஷன் இயற்கை திட்டத்தில் 3700–க்கு மேற்பட்ட பள்ளிகள் மாநில அளவில் கலந்துகொண்டன. அதில் 3000–க்கு மேற்பட்ட பள்ளிகளில் பசுமை அமைச்சரவையும் நிர்ணயிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு பள்ளிகள் பசுமை நடைமுறைகளை பின்பற்றி, தனது பள்ளிகளையும், வீடுகளையும், சமுதாயங்களையும் சுற்றுப்புறசூழலை சீராக்கும் முறையில் மாற்ற மாணவர்கள் பங்கு ஏற்றனர். பள்ளிகளில் காய்கறி தோட்டம், மழைநீர் சேகரிப்பு முறை செயல்படுத்துதல், கழிவு மேலாண்மை, நெகிழி ஒழிப்பு, விழிப்புணர்வு பேரணிகள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் மூலம் மாற்றங்களை உருவாக்கி, இம்மாற்றங்களின் கதைகளை காணொளி மூலம் பதிவிட்டு, சிறந்த 5 பள்ளிகளுக்கும், 25 மாணவர்களுக்கும் விருதுகள் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பள்ளிக்கல்வி துறை World Wide Fund for Nature India(WWF–India ) துணையுடன் மிஷன் இயற்கை சுற்று சூழல் திட்டத்தை 2023–2024ஆம் ஆண்டில் Hi-Tech Lab வசதியுள்ள 6029 அரசு பள்ளிகளில் செயல்படுத்த உள்ளது. கடந்த ஆண்டில் நடைபெற்ற செயல்திட்டத்தின் தொடர்ச்சியாக, அரசு

பள்ளிகளில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான தேவையான வழிகாட்டு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் Hi-tech labs வசதிகள் உள்ள தங்கள் பள்ளிகளின் பெயர்களை தங்கள் சுற்றுசூழல் ஆசிரியர்கள் பெயர்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைய முகவரியில் பதிவிடவும். உங்கள் பள்ளிகளை இணைய தளத்தில் பதிவு செய்ய கடைசி நாள் 5 டிசம்பர் 2023 ஆகும். (https://academy.wwfindia.org/MissionEeyarkai). இதில் 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

மேலும் மாவட்ட சுற்று சூழல் ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பள்ளியின் சுற்று சூழல் ஆசிரியர்களுக்கும் இத்திட்டத்திற்கான வழிகாட்டு பயிற்சிகள் 2023 டிசம்பர் முதல் வாரம் இணைய வழி வாயிலாக நடைபெறும். இப்பயிற்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளியிலிருந்து ஒரு சுற்று சூழல் ஆசிரியரை நியமிக்கவும். இதற்கான zoom link மற்றும் தேதி மாவட்ட சுற்று சூழல் ஒருங்கிணைப்பாளர்களுக்கு குறுந்தகவல் வாயிலாக அனுப்பப்படும்.

ஒவ்வொரு பள்ளிகளிலும் 5 மாணவர்களை தேர்வு செய்து அவர்களின் பெயர்களை சுற்றுச்சூழல் ஆசிரியர் WWF Indiaவின் ஒருங்கிண்ணைப்பாளர்களுக்கு தெரிவிக்கவும் மேலும் இத்திட்டத்தின் இறுதியில் 2024 மார்ச் கடைசி வாரத்தில் சிறப்பாக செயல்படும் 5 பள்ளிகள் மற்றும் 25 மாணவர்களை மாநில அளவில் தேர்வு செய்து விருதுகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயல்முறைகள் மிஷன் இயற்கை கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. மிஷன் இயற்கை கையேடு மற்றும் குறும்படங்கள், தகவல்கள் இணைய வழி வாயிலாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். மேலும் திட்டத்தின் செயல்பாடு கால அட்டவணை இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (Roll out plan).

மேலே குறிப்பிட்டுள்ள மிஷன் இயற்கை திட்டத்தை செயல்படுத்த தேவையான பள்ளி கல்வித்துறையின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்துமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: Roll out plan

இணை இயக்குநர்
(நாட்டுநலப்பணித்திட்டம்)

பெறுநர்:
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

**MISSION EYARKAI Roll Out Plan**
**2023 – 2024**

| S.NO. | ACTIVITIES | TIMELINE |
|---|---|---|
| 1. | **Virtual DC and Teacher orientation:**<br>WWF-India will organize zonal level virtual meets for all District Eco Coordinators and Hi-tech school teacher in-charge of Eco-clubs in five separate zones ( 1 Hour duration) | **4th Dec 2023** |
| 2. | **School Registration & Green Cabinet students Selection:**<br>The Teacher incharge will enroll their schools in Mission Eyarkai online portal link. And select 5 Student representatives in each school.<br><br>**Portal Link: https://academy.wwfindia.org/MissionEeyarkai/** | **1stDec - 7th Dec 2023** |
| 3. | **Green School & Community Audit:**<br>Each school will submit an action plan outlining areas of focus and activities to be implemented along with the timeline. | **5th Dec –11th Dec 2023** |
| 4. | **Green school & Community Action Plan Implementation:**<br>Students and teachers will implement the action plan in their schools and communities. | **29thDec 2023– 10th Feb 2024** |
| 5. | **Submission of "STORY OF CHANGE" by schools:**<br>Each school will document activities conducted in their schools and changes observed in their communities through a write up and short video. The videos will be uploaded as YouTube links in the WWF submission portal. | **10th Feb – 17thth Feb 2024** |
| 6. | **Evaluation of stories and selection of schools & students:**<br>**District Level Evaluation:**<br>The submission forms & The story of change videos will be evaluated by WWF Team and District Eco-coordinators according to the rubric (provided by WWF) and two schools from each district will be selected for district level.<br>**State Level Evaluation:**<br>WWF and School Education department Panel will evaluate and select best 5 schools and students. | **20th Feb – 29th Feb 2024** |
| 7. | **Award Ceremony:**<br>Awards will be distributed to the best green schools and students | **As per discussion with the Department of School Education** |